# இந்து நாகரிகம்

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான துரித மீட்டல் செயற்றிட்டம் - 2020

வெளியீடு

வலயக்கல்வி அலுவலகம் தெற்குஇ

வவுனியா.

திருமதி.வ.குலராஜா

*ஆசிரிய ஆலோசகர்*

தரம் 12

இந்துப்பண்பாடு…….

1.பண்பாடு என்ற சொல்லினை முதலில் தமிழில் பிரயோகித்தவர் யார்?

T.K.சிதம்பரநாத முதலியார்

2.பண்பாடு என்பதன் பொருள்?

குறித்த ஓர் இனமோ , சமுதாயமோ தனது அறிவாலும் ,அனுபவத்தாலும் , சிந்தனைத்திறனாலும் தனக்கென வகுத்து பேணிவரும் செயற்பாடே பண்பாடு.

3.பழந்தமிழ் இலக்கியங்களில் பண்பாடு என்பதால் சுட்டப்படுவது?

சால்பு

4.பண்பாட்டின் அமைப்பையும் , மேட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் காரணியாக சமயம் விளங்குகின்றது எனக் கூறியவர் யார்?

T.S.எலியட்டின்

5.நாகரிகம் என்ற சொல் முதன்முதலில் இடம் பெற்ற தமிழ் நூல் எது?

திருக்குறள்

6.இந்துப்பண்பாட்டில் பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கூற்றுக்கள் எவை?

- “என் கடன் பணி செய்து கிடப்பதே”……………..
- “கடமையைச் செய் பலனை எதிர் பாராதே”……………

7.இந்து நாகரிகத்திற்கு ஏன் உலகலாவிய பெருமையுண்டு?

சமூகம் , சமயம் , தத்துவம் , கலை , அரசியல் , அறிவியல் , வாணிபம் , வைத்தியம் முதலிய துறைகளை உள்ளடக்கியிருப்பதால்.

8.இந்துநாகரிகம் பண்பாட்டுச்சங்கமம் என்று கூறப்படுவதற்கான காரணம் யாது?

வடமொழிக்கலாச்சாரம் , தமிழ்கலாச்சாரம் என்பவற்றின் பிணைப்பைக்கொண்டிருப்தால்.

9.இந்து நாகரிகத்தின் தோற்றம் என அறிஞர்களால் வரையறுக்கப்பட்ட காலம்?

கி.மு. 3250 - கி.மு.2750

10.சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்கள் யாவர்?

- சேர்.ஜோன்.மார்ஷல்
- அலெக்சாண்டர்
- கண்ணிங்காம்
- வில்லியம்ஜோன்ஸ்

11.சிந்துவெளி நகரங்களான ஹரப்பா , மொகஞ்சதாரோ அமைந்துள்ள இடங்கள் எவை?

ஹரப்பா – மேற்குப்பஞ்சாப்

மொகஞ்சதாரோ - பாகிஸ்தான்

12.சிந்துவெளி முத்திரைகளில் உள்ளஎழுத்து வடிவங்கள் பசுபதி என்னும்பெயரைச்சுட்டுகிறது எனக்குறிப்பிட்டஅறிஞர் யார்?

சேர்.ஜோன்.மார்ஷல்

13.இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது எனக்கூறியவர் யார்?

சேர்.ஜோன்.மார்ஷல்

14. ‘‘சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்திலான நடனமாதின் வடிவம் சிவபெருமானது பிற்கால நடனத்திற்கு தோற்றுவாயாகலாம் எனக்குறிப்பிட்ட அறிஞர் யார்?

மா.இராசமாணிக்கனார்

15.துளைகளை உடையதாக காணாப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்ததாக குறிப்பிட்ட அறிஞர் யார்?

அறிஞர் மாக்கே

16.சிந்து வெளிக்கால இசைக்கலை பற்றி அறிய உதவும் தொல்பொருள் சான்றுகள் எவை?

முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள மிருதங்கம் , தவில்

17.சிந்து வெளி மக்கள் சிற்பக்கலைக்கு மூலப்பொருள்களாகப் பயன்படுத்தியவை எவை?

வெண்கலம் , பழுப்பு நிறக்கற்கள் , சுண்ணக்கற்கள்

18.சிந்து ஓவியக்கலை சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதற்கான ஆதாரங்கள் எவை?

அங்கு கிடைக்கப்பெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்புகள், மீன்கள் , வட்டங்கள் , சதுரங்கள் ,இலைகள் எனப்பல உருவங்கள் வரையப்பட்டுள்ளமை.

19.சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட யோகி வடிவத்தினை சிவ வடிவத்துடன் இணைத்துக்கூறியவர் யார்?

சேர்.ஜோன்.மார்ஷல்

20.தற்கால சக்தி வழிபாட்டுடன் இணைந்ததாக சிந்து வெளி மக்களிடையே நிலவிய வழிபாடு எது?

தரைப்பெண்வழிபாடு

வேதம்……………….

1.இந்து இலக்கியங்களுள் பிரதான நூல்கள் எவை?

வேதம் , ஆகமம்

2.அறிவு நூல் எனக்கொள்ளப்படும் நூல் எது?

வேதம்

3.வேதங்களைத் ̇தொகுத்தவர் யார்?

வேதவியாசர்

4.வேத காலப்பகுதி யாது?

கி.மு.1500 – கி.மு.800 வரை

5.வியாசர் என்பதன் பொருள் யாது?

நான்கு வேதங்களையும் தொகுத்தமையால் வேதவியாசகர்

6. வேதங்களின் மறுபெயர்களும் எவை?

சதுர்மறை , சதுர்வேதம்

7.திரயீ வித்யாவில் உள்ளடக்கப்படும் வேதங்கள் எவை?

இருக்குவேதம்,யசுர்வேதம்,சாமவேதம்

8.இருக்கு வேத்தில் உள்ள மண்டலங்கள் எத்தனை , பாசுரங்கள் எத்தனை?

10 மண்டலங்கள் , 1028 பாசுரங்கள்

9.இருக்கு வேதத்தில் 2-7 வரையான மண்டலங்கள் இறைவனால் எம்முனிவர்களுக்கு அருளப்பட்டது?

விசுவாமித்திரர் , வாமதேவர் , அத்திரி , பரத்துவாசர்

10.மந்திரங்களை ஓதுபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

அத்வர்யுக்கள்

11.யசுர் வேதத்தின் இரண்டு பிரிவுகளும் எவை? எத்தனை சாகைகளைக்கொண்டது?

கிருஸ்ணயசுர் , சுக்கிலயசுர் - 101 சாகைகள்

12.சாமவேதம் எத்தனை பாடல்களைக்கொண்டது? அதன் இரு பிரிவுகளும்எவை?

1549 பாடல்கள் - ஆர்ச்சிகம் , உத்தரஆர்ச்சிகம்

13.அதர்வவேதம் எத்தனை காண்டங்களையும் எத்தனை சூக்தங்களையும் எத்தனை பாடல்களையும் கொண்டது?

காண்டங்கள் -20 சூக்தங்கள் -731 பாடல்கள் -6000

14.அதர்வ வேதத்தின் மறுபெயர்கள் எவை?

அதர்வாங்கிரஸ் , பிருகுவாங்கிரஸ் , பிரமவேதம்

15. ‘‘தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக’’ என இசையால் இறைவனை வழிபடுதல் பற்றி கூறும் நூல் எது?

இருக்குவேதம்

16.பிரபஞ்சஉற்பத்தி , பிரபஞ்சபடைப்புக்கு முற்பட்ட நிலை , படைப்பின் மூலாதாரம் பற்றியவிடயங்களை கூறும் சூக்தம் எது?

இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீய சூக்தம்

17.உலக ஒழுங்கைப்பேணுபவனாகவும் மனிதர்களின் ஒழுக்கத்தை கண்காணிப்பவனாகவும் கூறப்படுபவன் யார்?

வருணன்

18.பிராமணர்களின் முக்கிய கடமைகள் எவை?

வேட்டல் , வேட்பித்தல் , ஓதல் , ஓதுவித்தல்

19.தனிமனித வாழ்க்கைப்படிநிலைகள் எவை?

பிரமச்சரியம் , கிருகஸ்தம் , வானப்பிஸ்தம் , சந்நியாசம்

20.உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச்செழிப்பு போன்ற நன்மையளிக்கும் அதர்வவேத பகுதி எது?

பௌஷ்டிகானி

21.நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரம் கூறும் அதர்வவேத பகுதி எது?

பேஷஜானி

22.அரசர்களின் நன்மை கருதி கூறும் அதர்வவேத பகுதி எது?

ராஜகர்மானி

23.வேள்வி வழிபாட்டில் பிரதான இடத்தைவகிப்பவர் யார்?

புரோகிதர் , அக்கினிபகவான் , சோமன்

24.வேத்ததின் நான்கு பகுதிகள் எக்காண்டத்துள் உள்ளடங்கும்?

| சங்கிதை , பிராமணம் | ஆரணியம் | உபநிடதம் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| கர்மகாண்டம் | உபாசனைக்காண்டம் | ஞானகாண்டம் |

25.சங்கிதை என்பது யாது?

மந்திரங்களின் தொகுப்பு

26.பிராமணம் என்பதன் பொருள் யாது?

வேள்விக்கிரியைகளுக்குரிய விதிகளை எடுத்துரைப்பது.

27.பிரஜாபதியின் புத்திரிகள் யாவர்?

சபா , சமித்தி

28.வேதங்களின் மறுபெயர்கள் எவை?

எழுதாமறை , எழுதாக்கிழவி , சுருதி , மறை ,சுயம்பு , அபௌருஷேயம்

29.நால்வகை வர்ணக்கட்டமைப்பின் தொடக்கத்தைக்கூறும் வேதப்பகுதி எது?

இருக்குவேத புருஷசூக்தம்

30.கணவன் - மனைவி என்போரை சுட்டும் தொடர் இருக்கு வேதத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?

தம்பதி

31.வேதம் என்ற சொல் எதிலிருந்து தோற்றம் பெற்றது?

“வித்” என்ற வினையடியிலிருந்து

32.வித் என்ற சொல்லின் பொருள் யாது?

அறிவு

33.வேதகாலத்தில் இந்திரனுக்கு வழங்கப்பட்ட மறுபெயர்கள் எவை?

மகவான் , சதுக்கிரது

34.பௌத்த மதத்தில் இந்திரனை எவ்வாறு அழைப்பர்?

சதர்தன்

35.வேதகாலத்தில் அதி கூடிய பாசுரங்களால் போற்றப்படுபவன்?

இந்திரன்

36.வேத காலத்தில் சாமவேதம் ஓதுபவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

உத்காதா

37.இருக்கு வேதம் எத்தனை சாகைகளையும் எத்தனை மந்திரங்களையும் கொண்டது?

21 சாகைகள்

1055 மந்திரங்கள்

38.சதருத்திரியம் எந்த வேதத்தில் அமைந்துள்ளது?

யசுர் வேதம்

39.நமசிவாய என்ற மந்திரம் கொண்ட வேதம் எது?

யசுர் வேதம்

40.காயத்திரி மந்திரம் எவ்வேதத்தில் அமைந்துள்ளது?

இருக்குவேதம்

41.ஆதித்யகிருதயம் எனும் மந்திரம் எக்கடவுளைத் தியானிப்பது?

சூரியன்

42.அஸ்வமேதயாகம் எதற்காக செய்யப்படுகின்றது?

இந்திர பதவியை கைப்பற்றுவதற்கு

43.இராஜசூய யாகம் ஏன் நடாத்தப்படுகின்றது?

ஆரசர்களால் இழந்த நாட்டை மீண்டும் கைப்பற்றுவதற்காக

44.வாஜபேஜயம் எதற்காக செய்யப்படுகின்றது?

வலிமையை பெற செய்யப்படுகிறது

45.சர்வமேத யாகம் எதற்காக செய்யப்படுகின்றது?

உலகம் முழுவதும் நன்மை பெறவேண்டி.

ஆகமம்

01.இந்துமதத்தின் முதல் நூல்கள் எவை?

வேதம்,ஆகமம்

02.ஆகமத்தின் மறு பெயர்கள் இரண்டு தருக?

சிரௌதம்,சுபதந்திரம்

03. ஆகமங்கள் எம் மலையில் இருந்து தோற்றம் பெற்றது?

மகேந்திரமலை

04. "அண்ணல் அருகில் அருளும் சிவாகமம்......"எனப்பாடியவர் யார்?

மாணிக்கவாசகர்

05. ஆகமப் பொருளை தமிழில் கூறிய முதல் நூல் எது?

திருமந்திரம்

06. சிவாகமங்கள் எத்தனை? உபாகமங்கள் எத்தனை?

28 சிவாகமங்கள் 207 உபாகமங்கள்

07. ஆகமத்தின் உட்பிரிவுகள் எவை?

- சரியாபாதம்
- கிரியாபாதம்
- யோகாபாதம்
- ஞானாபாதம்

08. ஆகமங்கள் குறிப்பிடும் கிரியைகளை விளக்கும் நூல் எது?

பத்ததிகள்

09. சிவலிங்க இலக்கணம், உமாமகேஸ்வர இலக்கணம் ,ஆலயஅமைப்பு விதி ஆகியவற்றை கூறும் ஆகமத்தின் பகுதி யாது?

சரியாபாதம்

10. அட்டாங்கயோகம் , அட்டமாசித்திகள் பற்றிக் கூறும் பகுதி எது?

யோகாபாதம்

11. முப்பொருள் உண்மை புவனங்களின் தோற்றம் பற்றிக் கூறும் பகுதி எது?

ஞானாபாதம்

12. ஞானாபாத்தின் மறு பெயர் யாது?

ஆகமாந்தம்

13. சிவாகமங்கள் கூறும் கிரியையின் வகைகள் எவை?

- கர்ஷணம்
- பிரதிட்டை
- உற்சவம்
- பிராயச்சித்தம்
-

14. ஆலயம் அமைப்புக்குரிய இடத்தைத் தெரிவு செய்யும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?

கர்ஷணம்

15. ஆலயம் அமைப்பு விதிபற்றிக்கூறுவதனால் ஆகமத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

சாத்திரங்கள்

16. திருவுருவங்கள் அமைப்பதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

சிலாபரீட்சணம்

17. "திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல" எனக்கூறும் நூல் யாது?

சுக்கிரநீதி

18. அட்டாங்க யோகங்கள் எவை?

- ✓ இயமம்
- ✓ நியமம்
- ✓ ஆசனம்
- ✓ பிராணாயாமம்
- ✓ பிரத்தியாகாரம்
- ✓ தாரணை
- ✓ தியானம்
- ✓ சமாதி

19. அட்டமா சித்திகள் எவை?

- ✦ அணிமா
- ✦ லகிமா
- ✦ மகிமா
- ✦ கரிமா
- ✦ பிராப்தி
- ✦ பிரகாமியம்
- ✦ ஈசத்துவம்
- ✦ வசித்துவம்

20. ஆகமத்தில் சைவசித்தாந்த சிந்தனைகளை விளக்கும் பிரிவுகள் எவை?

யோகாபாதம் , ஞானபாதம்

21. அதிகளவில் தத்துவ சிந்தனைகளைக் கொண்ட ஆகமங்கள் எவை?

காரணாகமம் , கிரணாகமம் , ஸ்கர ஆகமம்

22. ஆகமங்கள் கூறும் ஆன்மாவின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றிற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

சுத்தாத்துவித முத்தி

23. சாக்தாகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

சங்கிதைகள் , தந்திரங்கள்

24.சாக்தாகமங்கள் எத்தனை?

77

25.சாக்தாகமங்கள் மூன்று தருக?

மகாநிர்வாணதந்திரம் , காமகலாவிலாசம் , திரிபுரரகசியம்

26.வைணவ ஆகமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

பஞ்சராத்திரம் , வைகாசனம்

27.வைணவ ஆகமங்கள் யாரால் தொகுக்கப்பட்டது?

விகானஸ்

28.வைணவ ஆகமங்கள் எத்தனை?

108

29.வைணவ ஆகமங்கள் நான்கு தருக?

- காசிபசங்கிதை
- ஈஸ்வர சங்கிதை
- சுகஸ்திய சங்கிதை
- அனிருதத் சங்கிதை

30.ஆகமம் என்பதன் பொருள் யாது?

தொன்று தொட்டு வரும் அறிவு

31. "வேதமோடாகமம் மெய்யாம் இறைநூல்"………….எனக்கூறும் நூல் எது?

திருமந்திரம்

புராணங்கள்……

1.புராணம் என்பதன் பொருள் யாது?

பழமை வாய்ந்தது.

2.புராணம் யாரால் தோற்றுவிக்கப்பட்டது?

பௌராணிகர்களால்

3.புராணங்கள் ஏன் தோற்றம் பெற்றன?

வைதீக ஒழுகலாறுகளைப்பேணும் வகையிலும் , தெய்வீக வரலாற்றைப்பரப்பும் நோக்கிலும் புராணங்கள் தோற்றம் பெற்றன.

4.புராணங்களின் காலம் எது?

குப்தர்காலம்

5.புராணங்கள் எத்தனை? பகுப்புமுறையினை எழுதுக?

- ❖ சிவபுராணம் - 10
- ❖ விஸ்ணுபுராணம் - 04
- ❖ அக்கினிபுராணம் - 01
- ❖ சூரியபுராணம் - 01
- ❖ பிரமபுராணம் - 02

6.வடமொழிப்புராணங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?

மகாபுராணங்கள் , அட்டதசபுராணங்கள்

7.சூதர் ஓதிய மூவாறு தொல்கதை என்ற புராணக்கதைபற்றிக்கூறும் நூல் எது?

கந்தபுராணம்

8.பஞ்சலட்சணங்கள் எவை?

- சர்க்கம்
- பிரதிசர்க்கம்
- வம்சம்
- வம்சானுசரிதம்
- மனுவந்தரம்

9.தச லட்சணங்களைக்கறிப்பிடுக?

- சர்க்கம்
- பிரதிசர்க்கம்
- வம்சம்
- வம்சானுசரிதம்
- மனுவந்தரம்
- முத்தி
- லேது
- ருக்ஷா
- அபாரக்ஷய
- விருத்தி

10.புராணங்கள் எவ்வெவற்றைக் குறிப்பிடுகின்றன?

- தெய்வங்களின் வரலாறு
- சைவவைணவநெறிகள் பற்றிக்குறிப்பிடுதல்
- திருக்கோயில் வழிபாட்டு விதிமுறைகள்
- தெய்வீக பரத்துவம்
- பக்திமரபுகள்
- கலை அரசியல் மரபுகள்

11. புராணங்கள் கூறும் தெய்வீக பரத்துவத்துக்கு உதாரணம் தருக?

- சிவபரத்துவம் - அடிமுடி தேடிய கதை
- விஸ்ணுபரத்துவம் - பாகவதபுராணஅவதாரம்
- சக்திபரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தமை

12. புராணங்கள் கூறும் பக்தி மரபுக்கு உதாரணமாக திகழ்ந்தோர் யாவர்?

மார்க்கண்டேயர் , பிரகலாதன்

13. ஒருவன் செய்த பாவச்செயல்கள் அதற்குரிய பிராய்ச்சித்தங்கள் பற்றிக் கூறும்புராணம் எது?

கருடபுராணம்

14. ஆணவம் அழிவை ஏற்படுத்தும் எனக் கூறும் புராணம் எது?

கந்தபுராணம்

15. பக்தியின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் புராணம் எது?

மார்க்கண்டேயபுராணம் - யமசங்காரம்

16. கல்கி அவதாரம் பற்றி கூறும் புராணம் எது?

அக்கினி புராணம்

17. புராணங்களை ஓதியவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

சூதர்கள்

18. புராணங்களில் தெய்வீக வரலாற்றை கூறும் புராணம் எது?

திருவிளையாடற்புராணம்.

19. புராணபடனத்தை அறிமுகம் செய்தவர் யார்?

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

20. சோழர்காலத்தில் எழுந்த இரு தமிழ் மொழிப புராணங்களையும் குறிப்பிடுக?

கந்தபுராணம் . பெரியபுராணம்

21. கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களையும் தருக?

- உற்பத்திக் காண்டம்
- யுத்த காண்டம்
- தேவ காண்டம்

- தட்ச காண்டம்
- அசுர காண்டம்
- மகேந்திர காண்டம்

இதிகாசம்

01. ஐந்தாம் வேதம் என அழைக்கப்படுவது யாது?

மகாபாரதம்

02. இதிகாசம் என்பது யாது?

இது இவ்வாறு முன்பு நடந்த கதை

03. இதிகாச இலக்கியங்கள் எவை?

இராமாயணம் , மகாபாரதம் , இராமாயணம்

04. சிவரகசியத்தை இயற்றியவர் யார்?

ஓப்பிலாமணிப்புலவர்

05. இதிகாசங்கள் இறுதி வடிவம் பெற்ற காலம் எது?

குப்தர் காலம்

06. இதிகாசங்களின் உள்ளடக்குபவை எவை?

- சமயம்
- வழிபாடு
- அரசியல்
- வாழ்வியல்முறை
- தர்மம்

07.மகாபாரதம் எத்தனை பருவங்களையும் , சுலோகங்களையும் கொண்டது?

18 பருவம் , ஒருலட்சம் சுலோகம்

08.மகாபாரதத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் எவ்வாறு ஆரம்பிக்கின்றது?

"ஓம் நமோ நாராண்ய நமஸ்கிருதய"

09.மகாபாரத சாந்தி பருவத்தில் குறிப்பிடப்படும் ஒழுக்கங்கள் எவை?

அரச உபாயம் , மக்கள் ஒழுக்கம்

10.அரச தர்மங்கள் பற்றி போதிப்பவை எவை?

பீஷ்ம பருவம் துரோணபருவம்

11.பகவத் கீதை குறிப்பிடும் தத்துவக்கோட்பாடுகள் எவை?

- கடவுள்

- ♥ ஆன்மா
- ♥ கன்மவினை
- ♥ மறுபிறப்பு கோட்பாடு
- ♥ கர்மயோகம்
- ♥ பக்தியோகம்
- ♥ ஞானயோகம்

12.அர்ச்சுனன் தவம் புரிந்த வேளையில் சிவபெருமான் எவ்வடிவில் வந்து பாசுபாதாஸ்த்திரம் வழங்கினார்?

கிராதர் எனும் வேடர் வடிவில்.

13.இராமாயணம் வடமொழியில் யாரால் இயற்றப்பட்டது?

வான்மீகி

14.இராமாயணம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவை எவை?

ஏழு காண்டங்கள்

1) பாலகாண்டம்
2) அயோத்தியகாண்டம்
3) ஆரண்யகாண்டம்
4) கிஸ்கிந்தாகாண்டம்
5) யுத்தகாண்டம்
6) சுந்தரகாண்டம்
7) உத்தரகாண்டம்

15.இராமாயணம் எத்தனை சுலோகங்களைக் கொண்டது?

24000

16.ஆதிகாவியம் என போற்றப்படும் நூல் எது?

இராமாயணம்

17.இராமாயணத்தை தமிழ் , ஹிந்தியில் பாடியோர் யாவர்?

- ❖ தமிழ் - கம்பர்
- ❖ ஹிந்தி – துளசிதாஸர்

18.இராமாயணக்கதையுடன் தொடர்புறும் ஈழத்துக்கோயில்கள் எவை?

- ✦ சீதா எலிய
- ✦ மாமாங்கேஸ்வரம்
- ✦ திருக்கோணேஸ்வரம்
- ✦ கன்னியா

வடஇந்திய பக்தி இயக்கம்….

1.வட இந்திய பக்தி நெறியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்?

இராமானந்தர் , கபீர்தாசர், ஸ்ரீசைததன்யர், மீராபாய், துளசிதாசர்

2. வடஇந்திய பக்தி இயக்கத்தின் முன்னோடி யார்?

இராமானந்தர்

3. இராமானந்தரின் சீடர் யார்?

கபீர்தாசர்

4. வகுப்புவாதம், மதபேதம் என்பவற்றைப் புறக்கணித்து ஒருமைப்பாட்டைப் பேணியவர் யார்?

இராமானந்தர்

5. அரசியல்,சமூகக்கோட்பாடுகளுடன் வைணவநெறியையும் இராமபக்தியையும் இணைத்தவர் யார்?

இராமானந்தர்

6. வைணவத்திறகும் இஸ்லாத்துக்கும் இணைப்புப் பாலமாக விளங்கியவர் யார்?

கபீர்தாசர்

7. கபீர்தாசர் இயற்றிய பாடல்கள் எப்பெயரால் அழைக்கப்பட்டன?

கபீர்பந்தி

8. கபீர்தாசரின் சீடர்கள் யாவர்?

மனைவி, மைந்தன், சூரத்கோபால், சாஹிப், குருநாக்

9. வைணவநெறிக்குப் புத்துணர்ச்சி ஊட்டிய சமயப்பெரியார் யார்?

ஸ்ரீசைதன்யர்

10. ஸ்ரீசைதன்யரின் சீடர்கள் யாவர்?

நித்தியானந்தர், ஜீவகோஸ்வாமி, பாலதேவர், ஹரிதாஸ்

11. தமிழ்நாட்டில் பக்தி நெறியினை வளர்த்த ஆண்டாளுக்கு ஒப்பாக வடநாட்டில் பக்தி இயக்கத்தை வளர்த்தவர் யார்?

மீராபாய்

12. மீராபாயின் கணவர் யார்?

போஜ்ராஜ்

13. மீராபாய் எழுதிய வைணவ சமய உண்மைகளை விளக்கும் நூல்கள் எவை?

கீதகோவிந்தம், ராகமல்ஹார், ராககோவிந், ருக்மினிமங்களம், சத்தியபாமானூருசன்

14. பிரபக்தி மார்க்கத்தை மதுரபாவனையில் வெளிப்படுத்தியவர் யார்?

மீராபாய்

15. தன்னை கோகுலத்து ராதையாகவும் விஸ்ணுவை கோகுலத்தின் கண்ணனாகவும் கொண்டு தன் தெய்வீகக் காதலை இறைவனுக்கு உணர்த்தியவர் யார்?

மீராபாய்

16. "பார் தோழி! ஹரியின் மனம் கல்லாகிவிட்டது" எனக்கூறியவர் யார்?

மீராபாய்

17. "இராம சரித மானஸ்" என்ற பெயரில் இராமாயணத்தை இந்தியில் எழுதியவர் யார்?

துளசிதாசர்

18. அனுமன் சாலிசா என்னும் நூலை இயற்றியவர் யார்?

துளசிதாசர்

19. மக்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஸ்ரீராமனிடம் முறையிட்டு துளசி தாசர் எழுதிய நூல் எது?

விநயபத்திரிகா

20. துளசிதாசர் எழுதிய நூல்கள் எவை?

சிரசந்தீபனி, கிருஷ்ண கீதாவளி, கவிதாவளி, இராமசரித மானஸ், ஜனகி மங்களம்.

உலக நாடுகளில் இந்துநாகரிகம்

1. அரசர்கள் கடவுளர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்ற கருத்து நிலவும் நாடு எது?

   சம்பா

2. சயாம் நாட்டில் இந்துக்குடியிருப்பு காணப்பட்ட பகுதி எது?

   மணிகீகிராமம்.

3. ''அஸ்கோவாட்'' சிவாலயம் யாரால் எங்கே கட்டப்பட்டது?

   சூரியவர்மன் - கம்போடியா

4. பத்திவர்மன் - பத்திகேஸ்வரர் கோயில் எங்கு அமைந்துள்ளது?

   சம்பா

5. பத்துமலைமுருகன் ஆலயம் அமைந்துள்ள நாடு எது?

   மலேசியா

6. ஜவா தேசத்தில் அமைந்துள்ள ஆலயங்கள் எவை?

   பிரம்பனார் கோயில், பொரபது விநாயகர் ஆலயம்

7. ''அவனி நாராயணன்'' என்னும் விருதுப் பெயர் கொண்ட மன்னன் யார்?

   நந்தி வர்மன்

8. ''பூனாக்'' எனும் இந்தியர்களின் இராட்சியம் அமைந்த நாடு எது?

   கம்போடியா

9. அரசனை இறைவனாக கருதி வழிபடும் வழிபாடு எவ்வாறு அழைக்கப்பட்டது?

   தேவராஜ வழிபாடு

10. கம்போடியாவில் இயற்கைப் பொருட்கள் எப்பெயரினால் வழிபாடு செய்யப்பட்டது?

    அணஸ் குடா

11 இராம கீர்த்தி என்னும் பெயரால் படிக்கப்பட்ட நூல் எது?

   இராமாயணம்

12. நாடுகளின் சிறப்புப் பெயர்களைக் குறிப்பிடுக?

- பர்மா - சுவர்ண பூமி
- சுமாத்திரா - சுவர்ண பூமி
- கம்போடியா - கம்பூச்சியா
- மலேயா - கடகத் துவீபம்
- போர்ணியோ - கற்பூரத் துவீபம்

சம்பா

13. சம்பா நாடு தற்போது எப் பெயரால் அழைக்கப்படுகின்றது?

வியட்னாம்

14. "சுவர்ண பூமி" என்பதன் பொருள் யாது?

பொன்கொழிக்கும் நாடு

15. வாணிப உறவுக் கோட்பாடு, அரசு நிறுவனக் கோட்பாடு என்றால் என்ன?

வாணிப உறவுக் கோட்பாடு, - வைசியக் கோட்பாடு

அரசு நிறுவனக் கோட்பாடு - சத்திரியக்கோட்பாடு

16. மேலை நாடுகளில் இந்துப்பண்பாடு பரவக் காரணம் யாது?

கல்வி

வேலைவாய்ப்பு

வாணிபம்

அரசியல் நடவடிக்கை

போர்

திருமணம்

கலைகள் ………..

1.கலையுருவாக்கம் என்பது தூய உளச்செயற்பாடு எனக்கூறியவர் யார்?

கலாயோகி ஆனந்தகுமாரசாமி

2.ஆயகலைகள் எத்தனை?

64

3.விக்கிரகம் அமைப்பதற்கான மூலப்பொருள் பற்றி கூறும் நூல் எது?

மானசாரம்

4.நாட்டியசாஸ்திர ஆசிரியர் யார்?

பரதமுனிவர்

5.நடனக்கலைக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?

அபினவகுப்தர்

6.பல்லவர் கால கட்டிடக்கலை அமைப்பின் பிரிவுகள் எவை?

- ❖ மகேந்திரவர்மன் பாணி
- ❖ மாமல்லன் பாணி
- ❖ இராஜசிம்மன் பாணி
- ❖ நந்திவர்மன் பாணி

7.மகேந்திர வர்மனின் கட்டிடக்கலை சிறப்பு கூறும் சாசனம் எது?

மண்டகப்பட்டு சாசனம்

8.மகேந்திரவர்மன் அமைத்த குடைவரை கோயில்கள் யாவை?

- ➢ சீயமங்களம்
- ➢ திருச்சிராப்பள்ளி
- ➢ மண்டகப்பட்டு
- ➢ மாமண்டூர்
- ➢ வல்லம்

9.மாமல்லனால் அமைக்கப்பட்ட கோயில்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

இரதக்கோயில்கள் (மலைத்தளிகள்)

10.சிற்பக்கலைக்களஞ்சியம் எனப்போற்றப்படுவது எது?

தர்மராஜரதம்

11.மாமல்லன் அமைத்த மண்டபங்கள் எவை?

- ➢ திரிமூர்த்தி மண்டபம்
- ➢ தர்மராஜ மண்டபம்
- ➢ கொடிக்கால் மண்டபம்

12.தமிழகத்தின் முதலாவது கட்டுமான கோயில் எது? அதன் மறுபெயர்கள் எவை?

காஞ்சிகைலாசநாதர் கோயில் - பெரியகற்றளி ,இராஜசிம்மபல்லேஸ்வரம்

13.ஜலசைலம் எனப்படும் தலம் எது?

மாமல்லபுரம் கடற்கரைக்கோயில்

14.பரமேஸ்வர விண்ணகரம் எனப்போற்றப்படும் தலம் எது?

காஞ்சி வைகுந்தப்பொருமாள் கோயில்

15.நந்திவர்மன் அமைத்த கோயில்கள் எவை?

- முத்தீஸ்வரர்
- மதங்கேஸ்வரர்

16. சோழர்கால கட்டடக்கலை ஆரம்பத்தைக் காட்டும் கோயில் எது?

விஜயாலய சோழேஸ்வரம்

17. சாளுக்கிய மன்னனை வெற்றிகொண்டதன் நினைவாக இராஜராஜன் கட்டிய கோயில் எது?

தஞ்சைப் பெருவுடையார் கோயில்

18. பிரமிட் வடிவில் விமானம் அமைந்த கோயில் எது?

தஞ்சைப் பெருவுடையார் கோயில்

19. கங்கை கொண்ட சோழேஸ்வரத்தை அமைத்தவன் யார்?

இராஜேந்திரசோழன்.

20. கருவறையின் இரு புறமும் வட கைலாயம், தென்கைலாயம் எனக்கூறும் ஆலயம் எது?

கங்கை கொண்ட சோழேஸ்வரம்

21. வில் வடிவில் விமானம் காட்சி தரும் கேகாயில் எது?

கங்கை கொண்ட சோழேஸ்வரம்

22. சிற்பங்களால் இளைக்கப்பட்ட ஒரே சோழர் வளாகம் எனப் போற்றப்படும் தலம் எது?

ஐராவதேஸ்வரம்

23. சிவ மூர்த்தங்களின் எண்ணிக்கை யாது?

64

24. நடராஜர் வடிவம் விளக்கும் தத்துவத்தை தருக?

- படைத்தல் - உடுக்கேந்திய கரம்
- காத்தல் - அபயகரம்
- அழித்தல் - தீயேந்திய கரம்
- மறைத்தல் - ஊன்றிய திருவடி

- அருளல் - தூக்கிய திருவடி

25. குனித்த புருவமும் பாடியவர் யார்?

    திருநாவுக்கரசர்

26. சிதம்பரத்தின் நடராஜர் எவ்வாறு போற்றப்படுகின்றார்?

    தில்லைக்கூத்தன்

27. கால் மாறிஆடும் நடராஜர் எங்குண்டு?

    மதுரை மீனாட்சியம்மன் சுந்தரேஸ்வரர் ஆலயம்.

28. “குனித்த புருவமும்……” என்ற பாடலில் குறிப்பிடும் மூர்த்தம் எது?

    நடராஜர்

29. நடராஜரை வழிபடுவதற்குரிய விரதங்கள் எவை?

    திருவெம்பாவை, மார்கழித்திருவாதிரை

30. நடராஜர் வடிவத்தின் சிறப்பை உலகறியச் செய்தவர் யார்?

    கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி

31. சிவநடனம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

    கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி

32. பஞ்சகிருத்திய வடிவத்துடன் தொடர்புடைய வடிவம் யாது?

    நடராஜர்

33. நால்வகை வேதங்களுள் இசைக்கு பெயர் போன வேதம் எது?

    சாமவேதம்

34. சாமகானம் பாடுவதில் வல்லவன் யாா்?

    இராவணன்

35. “பெரியகவி” என போற்றப்படும் மன்னன் யார்?

    சமுத்திர குப்தன்

36. சங்க காலத்தில் பண்களைப் பாடியவர்கள் யாவர்?

    பாணர்கள்

37. “சங்கீரண ஜாதி” எனப் போற்றபடும் மன்னன் யார்?

    மகேந்திர வர்மன்

38. இசையிலே புலமை பெற்றிருந்தமையால் இராஜசிம்மனுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் எவை?

    வாத்திய வித்தியாதரன், வீணாதரன்

39. சோழர்காலத்தில் இசைக்கலைஞனுக்கு வழங்கப்பட்ட பட்டம் எது?

வாச்சிய மாராயணன்.

40. இசையில் சிறந்துவிளங்கிய ஈழத்து புலவர் யார்?

சுவாமி விபுலாநந்தர்

தரம் - 13

இந்து தத்துவசிந்தனை

<u>வேதம்</u>

01. இந்து தத்துவத்தின் மூலங்கள் எவை?

உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை

02. வேத இலக்கியங்களில் காணப்படும் தத்துவகோட்பாடு தொடர்பான மகாவாக்கியங்கள் 2 தருக?

ஏகம் ஸத், தத் ஏகம்

03. தத்துவ சிந்தனைகள் அனைத்துக்கும் மூலமாக விளங்கும் இலக்கியம் எது?

வேத இலக்கியம்

04. தத்துவ சிந்தனைகள் அதிகமாக கொண்ட வேத காண்டம் எது?

ஞானகாண்டம்

05. "இந்திரன், மித்திரன், வருணன் ………. என பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவ்வாறு அழைக்கப்படும் சக்தி ஒன்றே" எனக்குறிப்பிட்ட வேதம் எது?

இருக்கு வேதம்.

06. ஒரு கடவுட் கோட்பாடு பற்றி விபரித்த அறிஞர் யார்?

மாக்ஸ்மூலர்

07."மகத்தேவனாம் அசுரத்தவம் ஏகம்" என்ற வேதப்பாடலின் பொருள் யாது?

தேவர்கள் பலவாயினும் இவற்றின் இயல்புகள் ஒன்றே.

08. இறைவனுக்கும் பிரபஞ்ச படைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளிப்படுத்தும் வேதப்பகுதி எது?

புருசசூக்தம்

09- யாகத்தின் மூலம் உலகம் படைக்கப்பட்டது எனக்கூறும் வேதப்பகுதி எது?

புருஷ சூக்தம்

10. வேத காலத்தில் ரிதத்தின் பாதுகாவலனாக கொள்ளப்பட்ட கடவுள் யார்?

வருணன்.

11. ரிதத்தை மீறுபவர் பாவத்திற்கும் பொய் வாழ்விற்கும் உட்படுவர் எனக் கூறும் வேதப்பகுதி எது?

வர்ணசூக்தம்

12. கன்மம், மறுபிறப்பு பற்றி விரிவான செய்தி தரும் வேதப்பகுதி எது?

யமசூக்தம்.

13. தெய்வ வழிபாடு என்றும் கர்மத்தில் ஈடுபட்டவன் தேவ உலகமாகிய சுவர்க்கத்தை அடைவான் என்று குறிப்பிடும் இலக்கியம் எது?

யமசூக்தம்

14. "நன்மைகளுடன் விண்ணுலகம் நோக்கிச் செல்வாயாக" எனும் வேண்டுதல் இடம் பெறும் வேதம் எது?

இருக்கு வேதம்.

<u>உபநிடதம்</u>

15. வேதத்தின் இறுதிப் பகுதியாக விளங்குவதால் உபநிடதத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

வேதாந்தம்

16- உபநிடதம் என்பதன் பொருள் யாது?

பிரமஞானத்தை உணர்த்தும் ஒரு குருவின்' அருகில் இருந்து 'மறைப்பொருட் கோட்பாடுகளை சிரத்தையுடன் கேட்டல் எனப்பொருள்படும்.

17. ஞான உபதேசங்கள் எனப்படுபவை யாவை?

உபநிடதங்கள்

18. பொருத்தமான சீடருக்கே மறை பொருட்தத்துவம் போதிக்கப்பட்டதால் உபநிடதங்களுக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

இரகசியங்கள்

19. ஞான உபதேசம் என உபநிடதம் அழைக்கப்பட்டதன் காரணம் யாது?

ஆன்மாக்கள் பிரமஞானத்துடன் இணையும் முறைபற்றி உரையாடல்கள் வடிவில் கூறுவதால்

20. உபநிடத மகாவாக்கியங்கள் 3 தருக?

- தத்துவம் அஸி
- அகம் பிரமாம்ஸ்மி
- சோகம் அஸ்மி

21. செய்யுள் நடையில் அமைந்த உபநிடதங்கள் எவை?

சுவேதாஸ்வர உபநிடதம், கடோபநிடதம்

22. உபநிடதம் எழுந்த காலம் எது?

கி.மு ஆறாம் நூற்றாண்டு

23. கிரியைகளுக்கு எதிராக எழுந்த இந்து தத்துவ இலக்கியம் எது?

உபநிடதம்

24. உடலை விட்டுப் பிரிந்த பின் ஆன்மாவின் நிலை பற்றிக் கூறும் உபநிடதம் எது?
கடோபநிடதம்

25. ‘என்னை இறப்பில் இருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக’ எனக்கூறும் உபநிடதம் எது?

பிருகதாரணியக உபநிடதம்

26. சிலந்தி தன்னிடம் இருந்து நூலை உண்டாக்குவது என்ற உதாரணத்தின் ஊடாக பிரம படைப்பைக் கூறும் உபநிடதம் எது? முண்டக உபநிடதம்

27. எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போல பிரம தத்துவம் மறைந்துள்ளது எனக்கூறும் உபநிடதம் எது?

சுவேதாஸ்வர உபநிடதம்

28. தத்துவமஸி, அகம் பிரமாஸ்மி என்னும் மகாவாக்கியங்கள் உணர்த்தும் பொருள் யாது?

பிரமமே ஆன்மா

29. ஆன்மா பிரமம் பற்றி அறியும் அறிவு எவ்வாறு அழைக்கப்படும்?

பர வித்யா

30. ‘‘பற்றுக்களுடன் வாழும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்க அப்பற்றுக்களுடனேயே பிறக்கின்றான்.’’ எனக் குறிப்பிடும் உபநிடதம் எது?

முண்டக உபநிடதம்

<u>பிரமசூத்தும்</u>

31. பிரமசூத்திர ஆசிரியர் யார்?

பாதராயணர்

32. பிரமசூத்திரம் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்?

வேதாந்தசூத்திரம், சாரீரகசூத்திரம், உத்திரமீமாம்சசூத்திரம்.

33. பிரம சூத்திரத்தின் அத்தியாயங்கள் எவை?

சமன்வயம், அவிரோதம், சாதனம், பலம்

34. பிரமசூத்திரத்திற்கு உரை எழுதியவர்கள் யாவர்?

ஆதிசங்கரர், இராமனுஜர், மத்துவர், பாஸ்கரர், ஸ்ரீகண்டர், நிம்பாக்கர், ஸ்ரீபதி, வல்லவர், சுகர், பலதேவர்

35. பிரமசூத்திரத்துக்கு உரைசெய்த நவீன இந்து தத்துவ அறிஞர் யார்?

டாக்டர். இராதாகிருஷ்ணன்.

36. இந்து தத்துவத்தின் தர்க்க முறைகளுக்கான திறவு கோலாக அமைந்த நூல் எது?

பிரம்மசூத்திரம்.

பகவத்கீதை

37. பகவத்கீதையின் அத்தியாயங்கள் எத்தனை?

18

38. பகவத்கீதை எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

மஹாபாரதத்தில்

39. பகவத் கீதையில் இடம் பெறும் யோகங்கள் எவை?

கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜயோகம்

40. பகவத்கீதை யாரை பிரமமாகப் போற்றுகினிறது?

விஷ்ணுவை

41. கிருஷ்ணர் தன் அவதார நோக்கத்தை கீதையில் எவ்வாற வெளிப்படுத்துகின்றார்?

''நல்லோரைக்காக்கவும் தீயோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கின்றேன்'' என்கிறார்

42. ''நான் பிரபஞ்சம் முழுவதினுடைய தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம்'' என கீதையில் எந்த யோகத்தில் எடுத்துரைக்கப்படுகின்றது?

ஞானவிக்ஞான யோகம்

43. விஷ்ணு பிரபஞ்சப் பொருட்கள் யாவற்றிலும் நிறைந்துள்ள நிலையினை எவ்வாறு குறிப்பிடுகின்றார்?

அந்தர்யாமித்துவம்

44. பிரபஞ்சத்திற்கும் விஷ்ணுவிற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை கீதையில் எவ்வாறு எடுத்துக்கூறப்பட்டுள்ளது?

''எனக்கு மேலானது எதுவமில்லை, நூலில் மணிகள் போல இவையாவும் என்னில் கோர்க்கப்பட்டுள்ளன'' எனக்கூறுகிறார்.

45. பகவத்கீதை கூறும் ஆன்மாவின் இறுதி இலட்சியம் யாது?

விஷ்ணுவின் பாதார விந்தங்களை அடைந்து பேரின்ப பெருவாழ்வு பெறுதல்.

46. பகவத்கீதைக்கு கீதாபாஷ்யம் என்ற பெயரில் உரை எழுதியவர்கள் யாவர்?

சங்கரர், இராமானுஜர், மத்துவர்

47. பகவத்கீதையை தழுவி அமைந்த வேதாந்தம் எது?

விஷிட்டாத்வைதம், துவைதம்

48. உபநிடத சிந்தனைகளை வைணவ ஸ்தானத்தில் நின்று விளக்கும் நூல் எது?

பகவத்கீதை

49. பகவத்கீதையில் எத்தனை சுலோகங்கள் உள்ளன?

700 சுலோகங்கள்

50. உபநிடதங்களை பசு எனவும் பகவத்கீதையைப்பால் எனவும் உருவகப்படுத்தியதன் காரணம் யாது?

இந்து தத்துவ சிந்தனைகளைத் தெளிவாக விளக்குவதால்.

## 02. வேதாந்தம்

01. மூவகை வேதாந்திகளையம் அவர்களது தத்துவக்கோட்பாட்டினையும் தருக?

- சங்கரர் - அத்வைதக்கோட்பாடு
- இராமானஜர் - விசிட்டாத்வைதம்
- மத்துவர் - துவைதம்

02. சங்கரரின் தாய்,தந்தையர் யாவர்?

தந்தை - சிவகுரு

தாய் - ஆரியம்மாள்

03. சங்கரா் பிறந்த இடம் எது?

இந்தியாவில் காலடி என்ற கிராமத்தில்

04. சங்கரரது வாழ்க்கைக் காலத்தை வரையறை செய்க?

கி.பி 788 – கி.பி 820

05. சங்கரரது மறுபெயர் யாது?

சண்மதப்பிரதிஸ்தாபகர்

06. சங்கரரின் குரு யாா்?

கோவிந்தபாதர்

07. அத்வைத கோட்பாட்டின் திறவுகோல் எனப் போற்றப்படும் நூல் எது? அதன் ஆசிரியர் யாா்?

மாண்டுக்கிய காரிகை - கௌடதபாதர்

08. அத்வைதக் கோட்பாட்டின் மறுபெயர் யாது?

ஒருமைவாதக் கோட்பாடு

ஏகான்மவாதக்கோட்பாடு

மாயாவாதக் கோட்பாடு

**1. சங்கரர்**

09. சங்கரர் பிரம சூத்திரத்துக்கு கொடுத்த விளக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

சங்கரர்பாஷிஜம் [ சங்கரர் மாபாடியம்]

10. சங்கரர் உபநிடதத்திற்கு கொடுத்த விளக்கம் யாது?

தசோஉபநிஷதபாஷிஜம்

11. சங்கரர் மாயைக்குசூட்டிய பெயர் யாது?

அனிர்வசநியம்

12. சங்கரர் குறிப்பிடும் மாயையின் வகைகள் ( இயல்புகள் ) எவை?

- ஆபரணம் - உள்ளதை மறைக்கும் இயல்புடையது
- விஷேபம் - இல்லாததை தோற்றுவிக்கும் இயல்புடையது

13. விவர்த்த வாதம் என்பதன் பொருள் யாது?

ஒருபொருள் இன்னொன்றாக மாறாதுஇருந்தபடியே மாறிவிட்டதாக தோன்றுவது.

காரணம் உண்மை காரியம் பொய் என்பதாகும்.

14. சங்கரர் இயற்றிய நூல்களைத்தருக?

| | | |
|---|---|---|
| சிவானந்தலகரி | சௌந்தர்யலகரி | கணேசபஞ்சதோத்திரம் |
| சுப்பிரமணியபுஜங்க மாலை | பஜகோவிந்தம். | சூரிய பிரபாபம் |
| ஆரியாசதகம் | விவேகசூடாமணி | உபதேசாயஷ்ரி |

15. தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்த வேதாந்தி யார்?

சங்கரர்

16. சங்கரர் உலகுக்கு சூட்டிய பெயர்?

ஜெகத் மித்ஜா

17. சங்கரர் அமைத்த மடங்கள் எவை?

காசி, சாஞ்சி,பூரி,சிருங்கேரி,கோவர்த்தனம், துவாரகை

18. சங்கரர் எந்த வகை முத்தியை முதன்மைப்படுத்துகின்றார்?

சீவன் முக்தி

விதேக முக்தி

## 2. இராமானுஜர்

19. இராமானுஜரின் தாய் தந்தை யார்?

    தந்தை - ஆதிகேசவாச்சாரியார்

    தாய் - காந்திமதியம்மை

20. இராமானுஜரின் விஷிட்டாத்வைதம் உபய வேதாந்தம் என அழைக்கப்பட காரணம் யாது?

    உபநிடதங்களோடு நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தை ஏற்றுக்கொண்டமையால்.

21. இராமானஜரின் வாழ்க்கைக்காலத்தை வரையறை செய்க?

    கி.பி 1027- கி.பி 1137

22. இளையாழ்வாா் எனப்பெயர் கொண்ட வேதாந்தியார்?

    இராமானுஜர்

23. இராமானுஜர் பிறந்த இடம் யாது?

    இந்தியாவில் பெரும்புத்தூர்

24. நம்மாழ்வார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த தத்துவஞானி யார்?

    இராமானுஜர்

25. பிரபக்தி கொள்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்தவர் யார்?

    இராமானுஜர்

26. தர்மபூத ஞானம் பற்றி குறிப்பிட்ட வேதாந்தி யார்?

    இராமானுஜர்

27. இராமானுஜரின் ஆசிரியர்கள் யாவர்?
    யாதப்பிரகாசர், திருக்கோட்டியூர்நம்பி

28. இராமானுஜர் ஈஸ்வரன் எனக் கூறும் கடவுள் யார்?

    விஷ்ணு (ஸ்ரீ மத் நாராயணமூர்த்தி)

29. பரிணாம வாதம் என்றால் என்ன?
    காரணம் உண்மை காரியம் பொய்

30. இராமானுஜர் சிறப்பிக்கும் முத்தி எது?
    விதேக முக்தி.

## 3. மத்துவர்

31. மத்துவரின் தாய்,தந்தையர் யாவர்?
    தந்தை - மத்ஜகேசப்பட்டர்
    தாய் - வேதவதி அம்மை

32. மத்துவரின் மறு பெயர்கள் யாவை?

    பூரணப்பிரக்ஞர், ஆனந்த தீத்தர், பன்மைவாதி

32. மத்துவர் பிறந்த இடம் எது?

உடுப்பி

33. மத்துவர் குறிப்பிடும் ஐவகை பேதங்களையும் தருக?

- ⇒ சீவஈஸ்வர போதம் - சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையிலான வேறுபாடு.
- ⇒ சடஈஸ்வர பேதம் - சடத்துக்கும் ஈஸ்வரனுக்கும் இடையிலான வேறுபாடு.
- ⇒ சிவசடபேதம் - சிவனுக்கும் சடத்திற்கும் இடையிலான வேறுபாடு.
- ⇒ சீவபரஸ்பரபேதம் - ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையிலான வேறுபாடு
- ⇒ சடஸ்பரஸ்பரவேதம் - ஒரு சடத்திற்கும் இன்னொரு சடத்திற்கும் இடையிலான வேறுபாடு

34. வாயுபகவான் துணையின்றி ஆன்மாக்கள் முக்தியடைய முடியாது எனக்குறிப்பிடப்படுபவர் யார்?

மத்துவர்

35. கன்னட தேசத்தில் ஹரிதாசர்களை உருவாக்கியவர் யார்?

மத்துவர்

36. ‘நரத்தை அடைந்த ஆன்மாக்கள் என்றும் நரகவாசிகளாகவே இருப்பர் அவர்களுக்கு பாவவிமோசனமே கிடையாது.’ எனக்கூறியவர் யார்?

மத்துவர்

37. மத்துவர் இரண்டும் இரண்டுதான் எனக் குறிப்பிடும் பொருட்கள் எவை?

இறைவன், ஆன்மா

38. இருக்கு வேதத்தில் முதல் 40 மந்திரங்களுக்கு உரை எழுதிய வேதாந்தி யார்?

மத்துவர்

39. மத்துவர் மகாபாரதத்திற்கு கொடுத்த விளக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

பாரத தார்ப்பரிய நிர்ணயம்.

***சைவசித்தாந்தம்***

01. சைவசித்தாந்தக்கோட்பாடுகளை விளக்கிக் கூறும் விளக்க நூல்கள் எவை?

பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள்

02. சைவசித்தாந்தக் கோட்பாட்டில் முதல் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?

சிவஞான போதம் - மெய்கண்ட தேவர்

03. சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்கள் எவை?

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப.:.றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம். சங்கற்ப நிராகரணம்,

04. சைவசித்தாந்த நூல்களில் காலத்தால் முற்பட்டவை எவை? அவற்றின் ஆசிரியர் யார்?

திருவுந்தியார் – திருவியலூர் உய்யவந்ததேவர்.

திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்த தேவர்

05. சிவஞானபோதம் எத்தனை சூத்திரங்களையும் இயல்களையம் உடையது?

பன்னிரண்டு சூத்திரங்களையும் நான்கு இயல்களையும்

- ⇒ பிரமாண இயல் - பதி,பசு,பாசம் என்னும் முப்பொருள்கள்
- ⇒ இலக்கண இயல் - முப்பொருளும் பொதுஇயல்பும் சிறப்பியல்பும் கூறுகிறது.
- ⇒ சாதன இயல் - உயிர்கள் பாசத்தில் இருந்து நீங்கி இறைவனை அடையும் வழியை கூறுகின்றது
- ⇒ பயனியல் - இறைவனை அடையும் வழியிற் செல்வோர் பெறும் பேற்றைக் கூறுகின்றது.

06. ரௌரவ ஆகமப் பொருளை விளக்கும் சைவசித்தாந்த சாஸ்திர நூல் எது?

சிவஞானபோதம்

07. சிவஞான போதத்தின் வழிநூல் எது? அதன் ஆசிரியர் யார்?

சிவஞானசித்தியார் – அருணந்தி சிவாச்சாரியார்

08. சிவஞான சித்தியார் எத்தனை சூத்திரங்களையும் பிரிவுகளையும் உள்ளடகியது?

12 சூத்திங்களையும் - பரபக்கம், சுபக்கம், எனும் இரு பிரிவுகள்

09. உண்மை விளக்கத்தின் ஆசிரியர் யார்?

திருவதிகை மனவாசகங்கடந்தார்

10. சிவஞான போதத்தின் சார்பு நூல் எது?

சிவப்பிரகாசம்

11. பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களில் திருவருளின் பயனை விளக்கும் நூல் எது?

அது எத்தனை அதிகாரங்களை உடையது?

திருவருட்பயன் - பத்து அதிகாரம்

12. சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் வினாவிடை அமைப்பில் அமைந்த நுர்ல் எது?

வினாவெண்பா

13. கொடிக்கவி (கொடிப்பாட்டு பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?

சிதம்பரத்திலே கொடியேற்றத்தின் போது ஏறாது நின்ற கொடியை ஏற்றுவதற்காக உமாபதி சிவாச்சாரியாரால் பாட்பட்டது

14. தச காரியங்கள் எவை?

தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி,

சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம்

15. "சிவமாதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்." எனக்கூறியவர்?

திருமூலர்

16. சைவசித்தாந்த கோட்பாடுகளுக்கு அடிப்படையாக விளங்கும் பிரமாணங்கள் எவை?

பிரத்தியட்சம் - காட்சியளவை

அனுமானம் - கருதலளவை

ஆப்தவாக்கியம். – நூலளவை

17. சற்கரியவாதம் என்றால் என்ன?

உள்ளது இல்லதாகாது இல்லாதது உள்ளது ஆகாது உள்ளதில் இருந்து உள்ளதே தோன்றும்

இல்லாததில் இருந்து உள்ளது தோன்றாது.

18. கடல் தன்னுள்ளே உப்பையும் தண்ணீரையும் கொண்டிருப்பது போல இறைவன் தன்னுள்ளே ஆன்மாவையும்

கெண்டுள்ளான் எனக்கூறும் நூல் எது?

சிவஞானசித்தியார்

19. சைவசித்தாந்தம் பதிக்கு வழங்கும் இருநிலைகளும் எவை?

சொரூபஇலக்கணம் (சிறப்பியல்பு), தடத்தஇலக்கணம்(பொதுஇயல்பு)

20. இறைவனின் மூவகைத்திருமேனிகளும் எவை?

அருவம், உருவம், அருவுருவம்

21. இறைவனின் எண் குணங்களும் எவை?

தன்வயத்தனாதல், தூயஉடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல்,முற்றும் உணர்தல்,

இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை,

வரம்பிலின்பமுடைமை

22. சிவனின் ஒன்பது பேதங்களையும் தருக?

| 1.**அருவம்** | 2.**உருவம்** | 3.**அருவுருவம்** |
|---|---|---|
| சிவம் | சதாசிவன் | மகேஸ்வரன் |

| | |
|---|---|
| சக்தி | உருத்திரன் |
| நாதம் | திருமால் |
| விந்து | பிரமன் |

23. ஐந்தொழில்களும் எவை?

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்

24. சதசத்து என அழைக்கப்படுவது எது?

பசு,

25. முப்பொருளில் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையுடையது எது?

பசு

26 மூவகை ஆன்மாக்களும் எவை?

சகலர்,பிரளயாகலர்,விஞ்ஞானகலர்.

27. ஏன் ஆணவம் மூலமலம் என அழைக்கப்படகிறது?

ஆன்மாவை அனாதியாகவே பற்றியிருப்பதால்

28. ஆகந்து மலம் என அழைக்கப்படுவது எது?

கன்மம், மாயை

29. சகசமலம் என அழைக்கப்படுவது எது?

ஆணவம்

30. ஆணவத்தின்குணங்கள் எவை?

- கற்பம் - பிடித்ததை பிடித்தருத்தல்
- குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்
- மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படல்
- கொலை - உயிர்களைக் கொல்லுதல்
- அஞர் - எப்பொழுதும் துக்கப்படல்
- மதம் - அகங்காரம் மேலிடுதல்
- நகை - சிரித்தல்

31. கன்மத்தின் செயல்கள் எவை?

- இருத்தல் - இந்திரிய வழியிற் செல்லல்
- கிடத்தல் - அவ்வழியில் ஓங்கி நிற்றல்
- விடுதல் - முயலுதல்
- இயற்றல் - இதவகிதஞ்செய்தல்.
- பரநிந்தை - பிறர் பழி கூறாமை
- மேவல் - பல பிறப்புக்களில் மேவல்

32. மூவகைக் கன்மங்களும் எவை?

சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்

33. எல்லாக்காரியங்களிலும் தன்னிடத்தில் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் காரணமாய் நிற்பது எது?
மாயை

34. மாயையின் மூன்று வகைகளம் எவை?

சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை

35. 36 தத்துவங்களும் எவை?

சிவதத்துவம் 5, வித்தியாதத்துவம் 7, ஆன்மதத்துவம் 24

36. ஆன்ம ஈடேற்றத்துக்கு சைவசித்தாந்தம் குறிப்பிடம் நான்கு மார்க்கங்களும் எவை?

சரியை, கிரியை, யோகம், ஞானம்

37. ஆன்மா மலங்களில் இருந்த விடுபட்டு பக்குவ நிலையை அடையும் படிநிலைகளாக சைவசித்தாந்தம் எவற்றைக்குறிப்பிடுகின்றது?

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம்

38. சைவசித்தாந்தம் குறிப்பிடும்முத்தி நிலை யாது?

சைவசித்தாந்த சுத்தாத்துவித முத்தி

39. தெய்வீகம், பௌதீகம், ஆத்மீகம் என்பது எதனைக் குறிக்கின்றது?

- ❖ தெய்வம் - காரணமாகவரும் கன்மம் - தெய்வீகம்.
- ❖ பஞ்சபூதம் காரணமாக வரும் கன்மத்தை - ஆதிபௌதீகம்.
- ❖ உயிர்களால் வரும் கன்மத்தை - ஆத்மீகம்.

40. மாயா காரியங்கள் எவை?

தனு,கரண,புவன,போகம்.

## ஆச்சிரம தர்மங்கள்.

1. நான்கு வாழ்க்கைப் படிநிலைகளும் எவை?

பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்

2. ஆச்சிரம தர்மத்தில் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் பற்றிக் கூறும் விதிநூல் எது?

தருமசாஸ்திரங்கள்

3. ஆச்சிரம தர்மத்தில் கடைப்பிடிக்க வேண்டியவ வாழ்க்கை முறைகள் எவை?

- பிரமச்சாரியம் - வாழ்க்கையின் ஆரம்ப கட்டம்
- கிருகஸ்தம் - மணமுடித்து இல்வாழ்க்கை நடாத்தம் காலம்
- வானப்பிரஸ்தம் - ஆன்ம ஈடேற்றத்துக்கு ஆயத்தமாகும் நிலை
- சந்நியாசம் - முழுத்துறவு நிலை

4. பிரமச்சாரியம் என்பது யாது?

மாணவனை மெய்ப்பொருளை நோக்கி அழைத்துச் செல்லும் கல்வி முறை

5. கல்வியினை "மெய்ப்பொருளை காண்பது அறிவு எனக்கூறியவர் யார்?

திருவள்ளுவர்

6. குருகலக் கல்வி முறையில கூறும் ஒழுக்கக் கருத்துக்கள் பற்றிக் கூறும் உபநிடதம் எது?

தைத்திரிய உபநிடதம்

7. கிருகஸ்தன் ஆற்ற வேண்டிய கடைமை பற்றிக்கூறும் நூல் எது?

தர்மசாஸ்திரங்கள்

8. பஞ்ச யக்ஞங்கள் அல்லது பஞ்சவேள்விகள் எவை?

- பிரமயக்ஞம் - பரம் பொருளை வழிபடல்
- தேவ யக்ஞம் - தேவர்களுக்கு ஆற்றும் வழிபாடு
- பிதிர்யக்ஞம் - பிதிர்லோக தெய்வங்களுக்கு செய்யும் வழிபாடு
- பூத யக்ஞம் - உயிரினங்கள் பொருட்டு செய்யம் வழிபாடு
- மானிட யக்ஞம் - மானிடர் பொருட்டு செய்யும் வழிபாடு

9- வானப்பிரஸ்த நிலை அதாவது "குடும்பத்தலைவனானவன் நெற்றியில் கோடுகள் விழ ஆரம்பித்த பின், தலையில் நரை தோன்றிய பின் தன் மகனுக்கு மகனைக் கண்ட பின் காட்டுக்குச் செல்லலாம்" எனக் கூறும் நூல் எது?

· மனுதர்ம சாஸ்திரம்

10- "சந்நியாச நிலையில் உன்னத இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையின் கடைசிப்பகுதிக்கு மனிதன் தனியாகவே நடந்து செல்ல வேண்டும்." எனக்கூறியவர் யார்?

டாக்டர் . இராதாகிருஷ்ணன்

11- பிரமச்சாரிய நிலையிலே நின்று ஞானிகளாக விளங்கியவர்கள் யாவர்?

சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர்

12. இல்லறத்தில் இருந்து கொண்டே ஞானிகளாக விளங்கியவர் யாவர்?

ஸ்ரீகிருஷ்ணபரமகம்சர், ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீராமர்

## புருடார்த்தங்கள்…..

13. புருடார்த்தங்கள் எவை?

அறம், பொருள், இன்பம், வீடு

14. புருடார்த்தங்கள் வடமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்

15. திரிவர்க்கங்கள் எவை?

அறம், பொருள், இன்பம்

16. “வேதம்தான் தர்மத்தின் அடிப்படை” எனப்பொருள்படும் சுலோகம் எது?

“வேதோ கிலோ தர்ம மூலம்”

17. தர்மம் “உண்மை” என்ற பொருளில் வந்த உபநிடதம் எது?

பிருகதாரணிய உபநிடதம்

18. சத்தியமே வெற்றி பெறும் ( சத்யம் ஏவ ஜயதே ) எனக்கூறும் உபநிடதம் எது?

முண்டக உபநிடதம்

19. தர்மத்தின் மூன்று பிரிவுகளான பிரமச்சாரியன் இல்வாழ்வான், வானப்பிரஸ்தன், ஆகியோர் கடமைகள் கூறப்பட்டுள்ள உபநிடதம் எது?

சாந்தோக்கிய உபநிடதம்

20- “தனக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்யாத போது இறத்தலே நன்று” எனக்கூறும் நூல் எது?

பகவத்கீதை

21. “ஆசாரமே மேலான தர்மம்” எனக்கூறும் நூல் எது?

மனுஸ்மிருதி

22. “அஹிம்சையே மேலான தர்மம்” என மகாபாரதத்தில் எப்பகுதியில் கூறப்பட்டுள்ளது?

அனுசரணை பர்வப்பகுதி

23- மஹாபாரதம், இராமாயணம் என்னும் இதிஹாசத்தில் தர்மத்தின் வழி வாழ்ந்தவர்கள் யாவர்?

- மஹாபாரதம் - தர்மர் முதலான பஞ்சபாண்டவர்கள்
- இராமாயணம் - இராமன்

24- “தர்மம் அது தன்னைக் கொன்றவனைக் கொல்லும் தன்னைப்பாதுகாத்தவனை பாதுகாக்கும்” எனக் கூறும் நூல் எது?

பகவத்கீதை

25. புராணங்கள் கூறும் இருவகைத் தர்மங்கள் எவை?

சாதாரணதர்மம், விஷேட தர்மம்

26. புராணம் கூறும் சாதாரண தர்மம் என்பது யாது?

யாவர்க்கும் எக்காலத்திற்கும் பொருத்தமாகவும் நிரந்தரமாகவும் உள்ள ஒழுக்க விதிகள்

27. புராணம் கூறும் விஷேட தர்மம் யாது?

அவரவர்க்குரிய தர்மம்

28. நால்வகை வர்ணத்தார்களும் யாவர்?

பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர்

29. தர்மசாஸ்திரங்களில் கூறப்படும் தர்மங்கள் எவை?

சுவதர்மம், ஆச்சிரமதர்மம், இராஜ தர்மம்

30. சுவதர்மம் என்பது யாது?

ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தலைக்குறிக்கும்.

31- ‘‘ஆச்சிரம தர்மம்’’ என்பது யாது?

வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள்

32. இராஜதர்மம் என்பது யாது?

நீதிபரிபாலனம், சமுதாய ஒற்றுமை, முடிசூட்டுதல், தர்மம் தவறினால் ஏற்படும் தீமை பற்றியும் கூறுகிறது.

33. புராணங்களில் ‘‘சாதாரண தர்மம்’’ பற்றி கூறும் புராணங்கள் எவை?

பத்மபுராணம், கருடபுராணம், கூர்மபுராணம், அக்கினி புராணம்.

34. உண்மை பேசுதல் என்ற தர்மத்தை வாழ்வில் இலட்சியமாய் பேற்றியவர் யாவர்?
அரிச்சந்திரன் , ருக்மாங்குதன்

35. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் எனக்கூறும் நூல் எது?
சிலப்பதிகாரம்

36- ‘‘அறம் துஞ்சும் செங்கோல்……..’’ என அரசியல் தர்மம் பற்றிக் கூறும் பாடல் இடம் பெற்ற இலக்கியம் எது?

புறநானூறு

37. ‘‘அறம் செய விரும்பு’’ எனக்கூறியவர் யார்?

ஔவையார்

38. ‘‘அறத்தால் வருவதே இன்பம்…..’’, ‘‘அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை…..’’ எனக் கூறும் நூல் எது?

திருக்குறள்

39. ‘‘பொருளில்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை ……..’’ எனக்கூறியவர் யார்?

திருவள்ளுவர்

40. ‘‘இந்துக்களின் பொருளாதாரக் கோட்பாட்டை’’ விளக்கும் நூல் எது?

அர்த்தசாஸ்திரம்

41. இராஜசேவை, வாணிபம், விவசாய பொருளின் முக்கியத்துவத்தை ‘‘தீவினை விட்டீட்டல் பொருள்,’’ எனக் கூறியவர் யார்?

ஔவையார்

42. “இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்நல்லாற்றில்………..” என்னும் குறட்பாவில் மூவர்க்கும் எனக்குறிப்பிடப்படுபவன் யார்?

பிரமச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி

43. ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் என்ற பாடலைப்பாடியவர் யார்?

ஔவையார்

## திருக்குறள்.

1. எக்காலத்தக்கும் பொருந்தும் கருத்துச் செறிவுடைய நீதி நூல் எது?

திருக்குறள்

2. திருக்குறளை இயற்றியவர் யார்? இவரின் மறுபெயர்கள் எவை?

திருவள்ளுவர் - பொய்யாமொழிப்புலவர்

தெய்வப்பலவர்

செந்நாப்புலவர்

3. திருக்குறளின் மறுபெயர்கள் எவை?

முப்பால்நூல் தமிழ் மறை தெய்வநூல்

பொய்யாமொழி உலகப்பொதுமறை

4. இந்நூல் எத்தனை பாக்களையும் எத்தனை அதிகாரங்களையும் கொண்டமைந்துள்ளது?

133 – அதிகாரம் 1330 குறட்பாக்கள்

5. திருக்குறள் எத்தனை பிரிவுகளை உடையது?

அறத்தப்பால் - 38 அதிகாரம் பொருட்பால் - 70 அதிகாரம் காமத்துப்பால் - 25 அதிகாரம்

6. திருக்குறளில் $1^{ம்}$ ,$4^{ம்}$ அதிகாரங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் எவை?

முதலாம் அதிகாரம் - கடவுள் வாழ்த்து

நான்காம் அதிகாரம் - அறன் வலியுறுத்தல்.

7. பொருட்பாலின் மூன்று அதிகாரங்களும் எவை?

ஓழிபியல், அரசியல், அங்கவியல்.

8- “காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்.” எனும் கூற்று யாருடையது?

திருவள்ளுவர்

# ஆத்திசூடி

1. ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?

   ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

2. அதியமானிடம் இருந்து நெல்லிக்கனி பெற்றவர் எக்காலத்துக்கரிய ஔவையார்?

   சங்ககாலம்.

3. ஔவையார் பாடல்கள் இடம் பெறும் சங்க இலக்கியங்கள் எவை?

   நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு.

4. அறநூல்கள் பாடிய ஔவையார் எக்காலத்தவர்?

   சோழர் காலம்

5. சோழர் கால ஔவையார் பாடிய நூல்கள் என அறியப்படுபவவை யாவை?

   அதிசயக்கோவை, பத்தனந்தாதிப் பெட்டகம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, கல்வியொழுக்கம், ஞானக்குறள், விநாயகர்அகவல், கணபதி ஆசிரியவிருத்தம், உயர்ஞானசாரநூல், நவமணிமாலை,தரிசனப்பத்து,அருந்தமிழ்மாலை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை

6. ஔவையாரின் வரலாற்றை அறிய உதவும் நூல்கள் எவை?

   திருவள்ளுவர்கதை, கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர்புராணம், விநோதரசமஞ்சரி, பன்னிருபுலவர்சரித்திரம், தமிழ்நாவலர் சரிதை, பாவலர் சரித்திரதீபம்

7. ஔவையாரின் வரலாற்றை எழுதியோர் யாவர்?

   மு.அருணாசலம், ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, ந.சுப்பிரமணியம், தமிழண்ணல்

8. ஔவையார் என்பதன் பொருள் யாது?

   தாய், அன்னை, புலமைப்பாட்டி, மூதாட்டி, துறவி, பெண்துறவி, நோற்பவள், தவப்பெண்

9. ஔவையாருக்கு கோயில் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

   தஞ்சை மாவட்டத்தில் துளகாப்பட்டினத்தில்

10. அஷ்டோத்திரநீதிநூல் என அழைக்கப்படுவது யாது? காரணம் தருக?

    ஆத்திசூடி 108 அறங்களைக்கூறுவதால்.

11. ஆத்திசூடி காப்புச்செய்யுள் எக்கடவுளை போற்றுகிறது?.

    சிவபெருமான்

12. ஆத்திசூடி எப்போது யாரால் பதிக்கப்பட்டது?

    து. சுதன்பாதிரியரால் 1851ல்

13. ஆத்தி சூடிக்கு தோற்றம் பெற்ற சார்பு நூல்கள் எவை?

புதிய ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடிபுராணம்,ஆத்திசூடிச்சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள்

14. ஆத்தி சூடி குறிப்பிடும் மானிட வாழ்க்கையின் பயன்கள் நான்கும் எவை?

அறம், பொருள், இன்பம், வீடு

## இந்துஅறவியலும் சமண பௌத்தமும்

1. இந்து ஒழுக்கவியலின் சிறப்புப் பற்றிக் கூறியவர் யார்? அக்கூற்றினை தருக?

மாக்ஸ்மூலர்.

கூற்று :- இந்தியாவில் இந்து அறிவைப்பெறுவதற்காக மட்டுமன்றி வாழ்வின் மிக உயர்வான இலட்சியங்களை நிறைவேற்றவதற்காகவும் மேற் கொள்ளப்பட்டது.

2. அவைதீக சமயங்கள் எவை?

சமணம், பௌத்தம், உலகாயுதம்

3. ‘‘உலகை நிலைநிறுத்துவதும் தாங்குவதும் எதுவோ அதுவே தர்மமாகும்’’ எனக்கூறம் வேதம் யாது?

இருக்க வேதம் :- 1ம் மந்திரம் - 22ம் சூத்திரம்

4. ‘‘ஒரு சமய நெறியின் வளர்ச்சிப் பாதை என்பது சத்தியத்தின் பாதை எனக்கூறும் உபநிடதம் எது?

முண்டக உபநிடதம்.

5. மனுஸ்மிருதி தர்மம் பற்றிக் கூறிய கூற்றினைத் தருக?

‘‘ தர்மம் தன்னைக் கொன்றவனைக் கொல்லும் காப்பவனைக் காக்கும்’’ எனக் குறிப்பிடுகிறது.

6.ஒழுக்க சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உபநிடதம் எது?

தைத்திரிய உபநிடதம். – சீக்ஷாவல்லி

7. பஞ்சமா பாதகம் பற்றிக் குறிப்பிடும் உபநிடதம் எது?

சாந்தோக்கிய உபநிடதம்.

8. பஞ்சமா பாதகங்கள் எவை?

பொய், களவு, கள், காமம், கொலை.

9. பௌத்தம் குறிப்பிடும் பஞ்ச சீலக் கொள்கைகளும் எவை?

கொலைசெய்யாமை, களவின்மை, காமமின்மை, மதுஅருந்தாமை, பொய்கூறாமை

10. பிறன்மனை நயத்தலைக் கண்டித்து கூறும் திருமந்திர பாடலடியினைத் தருக?

“ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே காத்த மனையாளைக் காமுறும் காளையா….”

11. “அறம் எனப்பட்டது செங்கோனாட்டத்து முறை வேண்டும்” என்று தலைவனுக்கரிய ஒழுக்கத்தை நியமப்படுத்துகின்ற நூல் எது?

புறநானூறு

12. “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” எனக்குறிப்பிடும் நூல் எது?

சிலப்பதிகாரம்.

13. அட்டாங்க யோகங்களைத் தருக?

- ✓ இயமம்
- ✓ நியமம்
- ✓ ஆசனம்
- ✓ பிராணாயாமம்
- ✓ பிரத்தியாகாரம்
- ✓ தாரணை
- ✓ தியானம்
- ✓ சமாதி

14. பௌத்தம் தனிமனித நெறிமேம்பாட்டிற்கு கூறும் வழிமுறைகளும் எவை?

நற்காட்சி, நற்கருத்து, நல்வாண்மை, நற்செயல், நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி

15. பௌத்த உபதேசங்களில் மனத்தை ஒரு நிலைப்படுத்தும் நெறிமுறைகள் எவை?

உபாசனை, தியானம்.

16. பௌத்த ஒழுக்கவியலின் நோக்கம் யாது?

இம்மை, மறுமைப் பயனைப் பெறுதல்

17. பௌத்தம் குறிப்பிடும் அட்ட சீலங்களும் எவை?

கொலைசெய்யாமை, களவின்மை, காமமின்மை, மதுஅருந்தாமை, பொய்யின்மை, காலைஉணவு ஏற்காமை (நடுப்பகலுக்கப் பின் உணஏதும் ஏற்காமை,) ஆடல்,பாடல் களிப்பு நிகழ்ச்சிகளில் ஈடுபடாமை (களியாட்டங்களை தவிர்த்தல்), ஆடம்பர படுக்கையை ஏற்காமை (சொகுசு நாடாமை)

18. இந்துக்கள் கூறும் நல்லொழுக்கத்தை பௌத்தம் எவ்வாறு குறிப்பிடுகின்றது?

மெத்தா - அன்புறுதேயம், கருணா - கருணை,

முதிதா - .இரக்க நல்லின்பம். உபேக்சா - நிதானம்

19. பௌத்தம் நல்ல, தீய செயல்களை எவ்வாறு குறிப்பிடுகின்றது?

நல்ல செயல் - குசல, தீயசெயல் - அசகுல

20. புகழ்ச்சிகளுக்குரிய நல்ல செயல்களை பௌத்தம் எவ்வாறு கூறுகின்றது? அவை எவை?

தஸகுசல

1. தான - ஈகை 2. சீல - ஒழுக்கம் 3. பாவனா - தியானம்

4. அபசாயன – மரியாதை 5. வெய்யாவச்ச – தொண்டு 6. பத்திதான – பகிர்ந்துகொள்ளல்

7. அனுமோதனா – பிறரின் நற்செயல்களில் மகிழ்தல். 8. தம்பசிரவன – தர்மம் முதலான தொடர்புகளை செவிமடுத்தல். 9. தம்மசேதனா – தர்மத்தை விபரித்தல்

10. திட்டிக்ஜுகம்ம – கருத்துக்களைச் சீர்படுத்தல்.

21. இகழ்ச்சிக்குரிய பத்துச் செயல்களும் எவை?

தஸ அகுசல

1. உடலால் புரிவது – கொலை, களவு, விபச்சாரம்

2. உரையால்புரிவது – பொய், வன்சொல், புறங்கூறல், வீணுரை

3. உள்ளத்தால் புரிவது – அவா,பகைமை, தவறான கருத்துக்கள்.

22. ‘‘தனது கோபமானது தான் செல்லும் இடத்தை அழிக்கும் நெருப்பை போன்றது’’ எனக்கூறும் நூல் எது?

திருக்குறள்

23. பௌத்தம் சினத்தால் ஏற்படும் தீமைகள் எவை எனக்கூறுகிறது?

1. அசிங்கப்படுதல் 11. செல்வந்தனாவதில்லை

111. பொருள் வளம் இழத்தல் 1V. நண்பர்கள் அற்றவனாக இருத்தல்

V. புகழ் பெறாமை V1, மறுமையிலும் துன்பப்படுதல்

V11. துன்பத்தால் நோய்வாய்ப்படுதல்.

24. இந்துமதம் கூறும் நான்கு நன்னெறிகளை பௌத்தம் எவ்வாறு கூறுகிறது?

பிரமவிஹாரா

25. அவைதீக சமயம் என்பது யாது?

வேதங்களை ஏற்றுக் கொள்ளாதவை.

# இந்துக்கல்விப் பாரம்பரியம்.

1. இந்துக்கல்விப்பாரம் பரியம் எதனை அடிப்படையாகக் கொண்டது?

   குருகுலக்கல்வியை

2. குருகுலக்கல்வியானது எவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது?

   இந்துசமயநெறி, இறைநம்பிக்கை, குருபக்தி, ஆச்சிரமவாழ்வு, வாழ்வியல் சிந்தனைகள், ஆன்மீகம்.

3. புராதன இந்துக்கல்வி மரபு எவ்விலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவை?

   வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டவை

4. மிப்பழைய காலத்தில் இருந்து குருவும் சீடர்களும் எவற்றின் கீழிருந்து வேதங்களை ஓதினார்கள்?

   ஆற்றங்கரைகள், மலையடிவாரங்கள், மரநிழல்களின் கீழிருந்து

5. குருகுலவாசக் கல்விமுறையைஎந்நூல் விபரிக்கின்றது?

   இருக்குவேதபிரமச்சாரியசூக்தம்

6. குருகுல கல்வி நிலையின் உயர் நிலையை எந்நூலில் காணமுடிகின்றது?

   உபநிடதங்களில்

7. குருகுலக்கல்வி என்றால் என்ன?

   மாணவர்கள் குருவின் இல்லம் நாடிச் சென்று குருவைத் தெய்வமாக மதித்து அவரோடு தங்கியிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து குருவிடம் கல்வி கற்றுக் கொள்ளல் ஆகும்

8. புராண இதிகாசக் காலங்களில் கல்வி நிலையங்களாகச் சிறப்புப்பெற்றவை எவை?

   முனிவர்களின் ஆச்சிரமங்கள்.

9. புராண இதிகாசக் காலங்களில் வேத உபநிடதங்களோடு எவற்றைக் கற்பித்தனர்?

   வில்வித்தை, மருத்துவம், சோதிடம், இலக்கணம்

10. இராமாயணத்தில் இராமனும் தம்பியரும் யாரிடம் கல்வி கற்றனர்?

    வசிட்டரிடம்

11. மகாபாரதத்தில் கிருஷ்ணரும் குசேலரும் யாரிடம் கல்வி கற்றனர்?

    சாந்தீப முனிவரிடம்

12. மகாபாரதத்தில் பாண்டவ, கௌரவர்க்கு குருகுலக்கல்வியை கற்பித்தவர்கள் யாவர்?

    துரோணர் மற்றும் கிருபாச்சாரியார்

13. பாண்டவ, கௌரவர்கள் குருகுலக்கல்வி முறையில் எவற்றைக் கற்றன?

    அரசியல், நிருவாகம், நீதி, போர்ப்பயிற்சி

14. சங்க இலக்கியங்களில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலக்கியம் எது?

புறநானூறு

15. சங்க மருவிய காலத்தில் கல்வியின் சிறப்புப் பற்றிக் குறிப்பிடும் நூல்கள் எவை?

திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவை

16. பல்லவ பாண்டிய காலத்தில் கல்விக் கூடம் எப்பெயரால் கட்டப்பட்டது?

கடிகை

17. காஞ்சி நகர் கல்வியில் சிறந்திருந்தமையை எடுத்தக்காட்டும் பாடலடி யாது? யாரால் பாடப்பட்டது?

“கல்வியில் கரையில்லாத காஞ்சிமாநகர்………”

பாடியவர் - திருநாவுக்கரசர்

18. சோழராட்சிக்காலத்தில் இந்துக் கல்வி மரபு எதனூடாக வளர்க்கப்பட்டது.?

ஆலயங்களை ஆதாரமாகக் கொண்டு வளர்த்தனர்

எடுத்துக்காட்டு :- தஞ்சைப் பெருங்கோயில் சரஸ்வதி மண்டபம்.

19 சோழராட்சிக்காலத்தில் வேதக்கல்வியோடு கலைவளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவை எவை?

பிராமணக்குடியிருப்பான சதுர்வேதி மங்கலம்.

20. நாயக்கர் காலத்தில் கல்வி மரபினை னேணிப்பாதுகாத்தலை எவை?

மடங்களும் ஆதீயினங்களும் (உதாரணம்:- திருவாவடுதுறை ஆதீனம்)

21. ஜரோப்பியராட்சிக்காலத்தில் இந்துக்கல்விப்பாரம்பரியத்தை பேணியவை எவை?

திண்ணைப்பள்ளிக்கூடங்கள்.

22. 19ம் நூற்றாண்டில் இந்துமக்களிடையே சமய விழிப்பணர்வு காரணமாக தோன்றிய சமய நிறுவனங்கள் எவை?

பிரமசமாயம்

ஆரியசமாயம்

இராமகிருஷ்ண மடம்

23. அனுராதபுரத்தை ஆண்ட பண்டுகாபயன் இராசகுமாரனுக்குரிய கல்வியை யாரிடம் கற்றான்?

பண்டுல.

24. இந்துக்கல்விப்பாரம்பரியத்தில் அரண்மனைகளிலும் வித்தியா பீடங்களிலும் கற்பிக்கப் பட்டவை எவை?

வேதங்கள், வேதாகமங்கள், சோதிடம் , அர்த்த சாஸ்திரம், மனுதர்மசாஸ்திரம்.

25. போத்துக்கேய ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் மடங்கள், ஆதீனங்கள், திண்ணைப்பள்ளிகள் எத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டன?

கல்வி

26. சைவக் கல்வி பாரம்பரியத்தை பாடசாலைகளின் ஊடாக வழங்ச் செய்தவர் யார்?

ஆறுமுகநாவலர்

27. ஆறுமுகநாவலரால் எப்பாடசாலையின் ஊடாக சைவக்கல்விபாரம்பரியம் மேற்கொள்ளப்பட்டது?

சைவப்பிரகாச வித்தியசாலை யாழ் இந்துக்கல்லூரி

28. 20ம் நூற்றாண்டில் இந்துப்பாடசாலைகளை நிறுவி கல்விப்பணிபுரிந்த சங்கம் எது?

சைவ வித்தியா விருத்திச் சங்கம்

29. இந்துக்கல்விப்பாரம்பரியத்தை முன்னெடுக்க அநாதை இல்லங்களை நிறுவி பணிபுரிந்தது எது?

இராமகிருஷ்ண மிசன்

30.ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த கல்வி வேத உபநிடதங்களை அடிப்படையாகக் கொணடவை எவை?

பரவித்தியா

31. உலகியல் சார்ந்த தொழில் சார் கல்வியைப் பெறுதல் எவ்வாறு சுட்டப்படுகிறது.?

அபரவித்தியா

32. கல்விக்குரிய காலமாக கருதப்படுபவை யாவை?

பிரமச்சரியம்.

33. புராதனக் கல்வியில் கல்வி உரித்துடையோர் யாவர்?

சூத்திரர் தவிர்ந்த ஏனையோர்.

34. குருகுல கல்வி முறையில் வயதெல்லையை மூவர்ணத்தவர்க்கும் வேறு படுத்துவது எது?

தர்மசாஸ்திரம்

35. குருகுல கல்வி முடித்து குருதட்சணை வழங்கிய ீடன் எவ்வாறு அழைக்கப்பட்டான்?

ஸ்நாகதன்.

36. குருவும் சீடனும் சேர்ந்து வேதங்கள் ஓதிய முறையினை கூறும் சூக்தம் எது?

பிரமச்சரிய சூக்தம்

37. குருகுல வாசமும் குருகுல கல்வியும் எம் மாதத்தில் ஆரம்பமாயின?

ஆடிமாத பூர்வபட்சம்

38. புராதனக் கல்வி முறையினை இரண்டு வகையாகப்பிரிக்கும் உபநிடதம் யாது?

முண்டகஉபநிடதம்.

39. வடஇந்தியாவில் கல்விச்சாலைகளாகி பின் பல்கலைக் கழகங்களாக விளங்கியவை எவை?

காசி, நாலந்த, உஜ்ஜயினி, பாடலிபுரம்

40. வடஇந்தியாவில் முதன்மை பெற்று விளங்கும் நகரங்கள் எவை?

வாரனாசி, தட்சசீலம்

41. சமய நூற்கல்விக்கு முக்கியத்துவம் பெற்ற நகரம் எது?

வாரனாசி

42. உலகியல் சார்ந்த கலைத்துறைக்கு முக்கியத்துவம் பெற்ற நகரம் எது?

தட்சசீலம்

43. தட்சகீலத்தோடு தொடர்பு பட்ட பேரறிஞர்கள் யாவர்?

பாணினி, கௌடில்யர், சரகர்

44. குப்தர் கால கல்விநிலையங்களைக் குறிப்பிடுக?

பீகார், நாலந்தா, வல்லவி

45. தலைசிறந்த கல்விப்பீடமாக விளங்கியது எது?

நாலந்தா

46. நாலந்தாவின் சிறப்பினைக்குறிப்பிடும் சீன யாத்திரிகன் யார்?

யுவான்சுவாங்

47. இந்துக்களிடையே துறவோர்˙ அமைப்புக்கள் தோன்றி மடங்களில் எக் கல்வியை போதித்தனர்?

சங்கரர் மடங்கள் - வைதீக மரபுக் கல்வி

“இந்து அறவியல்……..”

1. அறிவியல் என்றால் என்ன?

 அறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மைகளை பகுப்பாய்வுசெய்து பரிசோதனை மூலம் நிறவுதலே அறிவியல் எனப்படும்.

2. இந்து அறிவியலில் அடங்கும் துறைகள் நான்கு தருக?

 இந்து கணிதவியல், இந்துவானியலும் சோதிடமும், இந்து மருத்துவம், இந்து நாட்டாரியல்

3. வானியலை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற கலை எது?

 சோதிடம்

4. “இந்தியாவின் வானியல் வரலாறு மிகவும் பரந்தது” எனக்கூறியவர் யார்?

 S.B தீட்சித்

5. பண்டைய வானியல் கோட்பாடுகள் எவை?

 பிதாமகக்கோட்பாடு, புருஷக்கோட்பாடு, சூரியக்கொட்பாடு

6. வருஷம் 365 நாட்களைக் கொண்டது எனக்கூறும் கோட்பாடு யாது?

 பிதாமகக்கோட்பாடு

7. நீள்வட்டப் பாதையைப்பற்றிய விபரம் நட்சத்திரங்களின் தோற்றம் மறைவு நாட்கணிப்புப்பற்றிக் குறிப்பிடும் கோட்பாடு எது?

 புருஷக்கோட்பாடு

8. கிரகங்களின் அசைவு பற்றிக் குறிப்பிடும் கோட்பாடு எது?

 சூரியக் கோட்பாடு

9. சந்திர மாதம் எதனைக் கொண்டு அளவிடப்படுகிறது?

 நட்சத்திரங்களைக் கொண்டு அளவிடப் படுகிறது

10. நட்சத்திரங்களின் எண்ணிக்கை யாது?

 27

11. மாதத்தை உருவாக்ககுபவன் எனற கருத்தில் சந்திரனுக்க வழங்கப்படும் பெயர் யாது?

 மாசக்கிருத்தா.

12. புவியானது சூரியனைச் சுற்றி வருகிறது எனவும் தன்னச்சில் சுழல்கிறது எனவும் கருத்த வெளியிட்ட இந்து வானியல் அறிஞர் யார்?

 ஆரியப்பட்டர்

13. வானியல் ஆராட்சி மையம் எங்கே எப்போது இருந்ததாக நம்பப்படுகிறது?

 உஜ்ஜயனியில் கி.பி 5 – 6 ம் நூற்றாண்டளவில்

14. இந்து வானியல் புலமை மரபில் முப்பெரும் பிதாமகர்கள் யாவர்?

13ம் ஆரியப்பட்டர், வராஹமிகிரர், பிரம்மகுப்தர்

15. இந்தியாவின் கணிதவியற் சிறப்பைப் போற்றிய பிறநாட்டறிஞர் யார்?

சேவரச செபோத்து

16. ஆரியப்பட்டரின் சித்தாந்தத்தின் நான்கு பிரிவுகளும் எவை?

கீதிகா கணிதம் காளக்கியா கோளம்

17. உலகம் உருண்டையாக இருப்பதால் ஓரிடத்தில் இரவும் ஓரிடத்தில் பகலும் இருப்பதாக குறிப்பிட்ட அறிஞர்கள் யாவர்?

ஆரியப்பட்டர், புளிசர், வாஷிஸ்டர், லாடதேவர்

18. புளிச சித்தாந்தம் எனும் வானியல் யாரால் தொகுக்கப்பட்டது?

புளிசரால்

19. குப்தர் காலத்தில் வாழ்ந்த சிறந்த வானியலாளர் யார்?

பிரம்ம குப்தர்

20. பிரமஸ்புட சித்தாந்தம் எனும் வானியல் நூலின் ஆசிரியர் யார்?

பிரம்மகுப்தர்

21. கி.பி 6ம் நூற்றாண்டளவில் உஜ்ஜயனியில் வாழ்ந்த வானியலாளர் யார்?

வராகமிகிரர்.

22. "பஞ்ச சித்தாந்திகை" எனும் நூலின் ஆசிரியர் யார்?

வராகமிகிரர்

23- பஞ்ச சித்தாந்திகையில் குறிப்பிடும் 5 வானியல் சித்தாந்திகளும் யாவர்?

பௌலீசர், ரோமகர், வாசிஷ்டர், சௌரர், பைதாமகர்

24. யவனபுரத்தில் சூரியாஸ்தமனத்தைக் கொண்டு நேரத்தைக் கணித்தவர் யார்?

லடாசாரியார்

25. இலங்கையில் சூரியஉதயத்தைக் கொண்டு நேரத்தைக் கணித்தவர் யார்?

சிம்வராசாரியார்

26. சோதிடம் என்றால் என்ன?

கருமானுட்டங்களைச் செய்வதற்கு நாள், கோள் முதலிய காலவிஷேடங்களைக் கணித்துக் கூறுவது சோதிடம் எனப்படும்

27. மகாபாரதத்தில் சோதிட வல்லுனராக அறியப்படுபவர் யாவர்?

28. இராமாயணத்தில் சோதிடத்தின் செல்வாக்கு செல்வாக்கு காணப்பட்டமைக்கு ஆதாரம் ஒன்று தருக?

    இராமனது பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தமை

29. சோதிடம் என்பது வடமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?

    ஜ்யோதிஷம்

30. ஜ்யோதிஷத்தின் பொருள் யாது?

    ‘‘ஒளியுடைய சாஸ்திரம்’’ என்பதாகும்.

31. பிருது மன்னனின் சோதிடர் யார்?

    கார்க

32. ‘‘கார்கி சம்ஹிதை’’ எதைப்பற்றிய நூலாக அமைகிறது?

    சோதிடத்தைப் பற்றிய நூல்

33. ‘‘பிருஹத் சம்ஹிதை’’ எனும் நூலின் ஆசிரியர் யார்?

    வராகமிஹிரர்

34. ‘‘சோதிடனை ஆதரிக்காத அரசன் அழிவைச் சந்திப்பான்’’ எனக்கூறியவர் யார்?

    பகவான் கார்க

35. காலக்கணிப்போடு தொடர்புடைய அறிஞர் யார்?

    முஞ்சல

36. சோதிட சந்திர மாதங்களைப்பற்றி ஆராய்ந்து சோதிட விருத்திக்கு உதவியவர் யார்?

    சுதானந்தர்

37. ‘‘சாதக பாஸ்கரன்’’ எனும் நூலை இயற்றியவர் யார்?

    பாஸ்கராச்சாரியார்

38. சோதிடக் கலைச் சொற்கள் பற்றிய விளக்கம் குறிப்பிடப்பட்ட நூல் எது?

    பிருகத் சம்ஹிதை

39. பிருகத் ஜாதக, யோகயாத்திரா எனும் நூல்களை எழுதியவர் யார்?

    வராகமிகிரர்

40. ‘‘ஞாயிறானது மேடராசியில் தொடங்கி ராசிகள் தோறும் பெயர்ந்து செல்வதாக’’ குறிப்பிட்ட சங்க இலக்கியம் எது?

    நெடுநல்வாடை

41. இராசிகளுக்கும் நாண் மீன்களுக்கும் தமிழ்ப் பெயர்களை வழங்கியவர் யார்?

கூடலூர்க் கிழார்

42. முல்லைப்பாட்டில் காலத்தை அளவிடும் கருவியாக குறிப்பிடப்படுவது எது?

கன்னல் என்னும் நாளிகை வட்டில்

43. “கணியன்” என அழைக்கப்பட்டவர் யார்?

கோள்களின் இயக்கங்களைக் கணித்து முன்னரே கூறும் ஆற்றல் வாய்ந்தவர்கள்

44. சோதிடக் கலையில் வல்லவராக விளங்கிய சங்க காலப் புலவர் யார்?

கணியன் பூங்குன்றனார்

45. ஏழுகிழமையின் பெயர்களை ஒரு பதிகத்தில் வைத்துப்பாடியவர் யார்?

திருஞான சம்பந்தர்

46. சரசோதி மாலை என்னும் சோதிட நூலின் ஆசிரியர் யார்?

போசராச பண்டிதர்

47. செகராச சேகரமாலை யாரால் எழுதப்பட்டது?

சோமசன்மாவால்

48. சந்தான தீபிகை எனும் நூலை எழுதியவர் யார்?

அராலி இராமலிங்க முனிவர்.

49. இலகு சாதகம் எனும் நூலை எழுதியோர் யாவர்?

அம்பலவாணர்பிள்ளை, இடைக்காடர்

50. சந்தானமணி என்னும் சோதிடநூலை எழுதியவர் யார்?

சபாபதி சோதிடர்

51. சந்தான விருத்திக்கான நல்வழிமுறைகளை கூறும் நூல் எது?

சந்தானமணி

52.பஞ்சாங்கத்தின் உறுப்புக்கள் எவை?

வாரம்,திதி,நட்சத்திரம்,யோகம்,கரணம்

53.முதல் பஞ்சாங்கம் யாரால் எப்போது கணிக்கப்பட்டது?

ஆரியப்பட்டரால் ,குப்தர்காலத்தில்

54.இந்தியாவில் காணப்படும் பஞ்சாங்கங்கள் எவை?

வாக்கிய பஞ்சாங்கம் ,சித்தாந்த பஞ்சாங்கம் ,திருக்கணிதபஞ்சாங்கம்

55.இந்திய ஆண்டின் ஆறு பருவங்களும் எவை?

இளவேனில் இலையுதிர்காலம்

முதுவேனில் மாரிகாலம்

மழைக்காலம்                கூதிர் காலம்

56.அயனங்கள் எத்தனை வகைப்படும் ? அவை எவை?

2 வகைப்படும் , 1.உத்தராயனம்

2.தட்சிணாயனம்

57.உத்தராயன காலம் என்பது யாது?

தை முதல் ஆனி வரையுள்ள காலம்

58.தட்சிணாயன காலம் என்பது யாது?

ஆடி முதல் மார்கழி வரை

# மருத்துவம்

1.இந்துக்களின் மருத்துவக்கலை ஆரம்பமான இலக்கியம் எது?

இருக்கு வேதம்

2.திரிதாது எனக்குறிப்பிடப்படும் சூக்தம் எது?

ஒஷதி சூக்தம்

3.கண்,செவி சார்ந்த குறைபாடுகளை நீக்கும் வேத மருத்துவர் யார்?

அஸ்வினி குமாரர்கள்

4.இந்து மருத்துவ வரலாறாறில் அதர்வண வேதம் குறிப்பிடும் சூக்தங்கள்?

பேஷஜானி சூக்தம்

ஆயுஸ்யானி சூக்தம்

5.இந்துக்களின் மருத்துவம் வளர்ச்சி பெற உதவியவர்கள் ?

ஆத்திரேயர்

தன்வந்திரி

சரகர்

சுஸ்ருதர்

6.ஆத்திரேயர் இயற்றிய நூல் எது?

ஆயுள்வேத நூல்

7.மருத்துவத்தின் தந்தை எனப்போற்றப்பட்டவர் யார்?

தன்வந்திரி

8.ஆயுள் வேதத்தை அஷ்டாங்கம் எனப்படம் எட்டுப்பிரிவுகளாக வகுத்தவர் யார்?

தன்வந்திரி

9.சரகர் எழுதிய மருத்துவ நூல் எது?

சுரகசம்ஹிதை

10.வைத்தியத்தொழில் பயிற்சி முடித்த பின் நிகழ்தும் சமய விழாவின் போது வைத்திய மாணவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுரைகளை கூறியவர் யார்?

சரகர்

11.அறுவைச் சிகிச்சையின் தந்தை எனப்போற்றப்படுபவர் யார்?

சுஸ்ருதர்

12.மருத்துவ சிந்தனைகளை அதிகளவு உள்ளடக்கிய வேதம் எது?

அதர்வண வேதம்

13.சங்கமருவிய கால மருத்துவ நூல்கள் எவை?

திரிகடுகம் ,ஏலாதி ,சிறுபஞ்சமூலம்

14.சோழர்கால மருத்துவ நூல்கள் எவை?

சீவகசிந்தாமணி ,கம்பராமாயணம்

15.சங்ககால மருத்துவ நூல்கள் எவை?

பதிற்றுப்பத்தது ,பாலைக்கலி

16.பல்லவர்கால இந்துமருத்துவ பாரம்பரியங்களை எவற்றிலிருந்து அறியலாம்?

அக்கால கல்வெட்டுக்கலால் ,இலக்கியங்கள்

17.விஜய நகரகாலத்தில் புகழ்பெற்ற மருத்துவமனை எங்கு இருந்தது?

ஶ்ரீரங்கம் கோயிலில